# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

ஆணை எண். 22/ந/2024

நாள்.28.11 .2024

| | | |
|---|---|---|
| திரு. ஐ. வின்செண்ட் ராஜா,<br>பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் | – | எதிர்மனுதாரர் |

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, எஸ்.எஸ்.கோவில் தெரு, கதவு எண்.11/225 B–8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஐ.வின்செண்ட் ராஜா என்பவரின் 02.02.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.02.2024 அன்று பெறப்பட்டு, 22/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, எஸ்.எஸ்.கோவில் தெரு, கதவு எண்.11/225 B–8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஐ.வின்செண்ட் ராஜா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

"பரமக்குடி நகராட்சியில் மேலாளராகப் பணிபுரியும் திரு.தங்கராசு மற்றும் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. சுகன்யா ஆகிய இருவரும் லஞ்சம் கொடுப்பவர்ளுக்கு மட்டுமே வேலை செய்கிறார்கள். குறிப்பாக நகராட்சியில் பணிபுரியும் தொழிலாளர்களின் P.F. பணத்தில் கடன் பெறுவதற்கான விண்ணப்பத்தை அப்ரூவல் செய்து, அரசு கருவூலத்திற்கு (Treasury) பில்லை அனுப்பி வைப்பதற்கு திருமதி. சுகன்யா என்பவர் நபர் ஒன்றுக்கு ரூ.1000/–

வசூலிக்கின்றார். மேலும், துப்புரவுப் பணியாளர்கள் இலஞ்சம் கொடுத்தால்தான் உரிய பி.எப். பணத்தை வழங்குகிறார். திருமதி.சுகன்யாவின் செயலுக்கு மேனேஜர் திரு. தங்கராசு உடந்தையாக இருந்து வருகிறார்.

மேலும், கடந்த 18.12.2023 தேதி முதல் 05.01.2024 வரை 7 நாட்கள் பரமக்குடி நகராட்சிகுட்பட்ட 36 வார்டுகளிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மக்களின் முதல்வர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வார்டுகளிலும் நடத்தப்பட்ட மக்களிடம் மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் ஏற்பட்ட செலவுகளை மேலாளர் திரு. தங்கராசும், உதவியாளர் திருமதி. சுகன்யாவும் மேற்கொண்ட வகையில் ரூ.2,50,000/– செலவு செய்ததாக பொய் கணக்கு எழுதி அரசுப் பணத்தை கையாடல் செய்துள்ளனர். குறிப்பாக முகாம் நடந்த நாட்களில் பணியாளர்களுக்கு மதியம் ஒரு வேளை உணவு வழங்கிவிட்டு, மூன்று வேளையும் உணவு வழங்கியதாக பொய் கணக்கு எழுதியுள்ளார்கள்.

மேலும் நகராட்சியில் காண்ட்ராக்ட் பணிகள் எடுத்து செய்யும் ஒப்பந்ததாரர்களின் டெபாசிட் பணத்தை திருப்பி வழங்குவதற்கு திருமதி. சுகன்யாவிற்கு லஞ்சம் கொடுக்கும் காண்ட்ராக்டர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. லஞ்சம் கொடுக்காத காண்ட்ராக்டர்களின் பிடிமான பணத்தை கேட்டால் அந்தப்பணம் பணம் டெபாசிட் ரிஜிஸ்டரில் இல்லையென்றும் டெண்டர் ரிஜிஸ்டரை காணவில்லையென்றும் அலையவிடுகின்றனர்.

பரமக்குடி 1–வது வார்டு அம்மன் கோவில் தெரு, மூன்று தெருக்களில் தலா ரூபாய் பத்து லட்சத்திற்கு தார் சாலையும், 33வது வார்டு இரயில்வே பீடர்ரோடு குறுக்கு தெருக்களில் தலா ரூபாய் பத்து லட்சத்திற்கு தார்சாலை அமைக்கும் பணிகள் செய்து முடித்து மூன்று வருடம் முடிந்துவிட்டதால், அந்த 5 வேலைக்குரிய முன்வைப்புத் தொகை தலா ரூ.10,000/– மற்றும் பில்லில் பிடித்தம் செய்யப்படும் கூடுதல் வைப்புத்தொகை தலா ரூ.10,000/– ஆகியவற்றை திருப்பி தரக்கோரி கடந்த ஜுன் 2023ல் கடிதம் வழங்கினேன். 6 மாதம் அலையவிட்டு கடந்த 21.12.2023 அன்று இதர பணிகளுக்குரிய டெபாசிட் தொகையோடு காசோலை வழங்கினார்கள். ஆனால் அதில் மேற்கண்ட ஐந்து பணிகளுக்குரிய பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட தலா ரூ.10,000/– மட்டுமே வழங்கினார்கள். முன்வைப்புத் தொகை தலா ரூ.10,000/– எங்களுக்கு வழங்கப்படவில்லை. திருமதி. சுகன்யாவிடம் கேட்டதற்கு லஞ்சம் கொடுத்தால்தான் டெபாசிட் பணம் கொடுக்க முடியும் என்று ஆணவமாக பதில் சொல்கின்றார். இதற்கு மேலாளர் திரு. தங்கராசு உடந்தையாக இருக்கிறார்.

எனவே, மக்களுக்கு சேவை செய்வதற்காக பணிபுரிய வேண்டியவர்கள் லஞ்சம் கொடுத்தால்தான் பணி செய்வோம் என்று அடாவடித்தனம் செய்யும் நகராட்சி மேலாளர் திரு. தங்கராசு மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி. சுகன்யா ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து பரமக்குடி நகராட்சி, ஆணையாளர் அவர்களிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 18.07.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது. பரமக்குடி நகராட்சி ஆணையாளர் தனது 09.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்:

"பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதி தொகை பெற வரும் பணியாளர்களிடம் அலுவலக முறைப்படி உரிய கடிதம் பெறப்பட்டு

தொகை பரமக்குடி கருவூலத்தின் மூலம் ஊழியர்களின் வங்கி கணக்கிற்கே தொகை வழங்கப்படுகிறது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில் சேமநலநிதித் தொகை கடன் பெறுவதற்கு எந்தவிதமான பணமும் கொடுப்பதில்லை என தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்தனர். இதில் எந்தவித முறைகேடுகளும் நடக்கவில்லை.

பரமக்குடி நகராட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி கடந்த 18.12.2023 முதல் 05.01.2024 வரையில் இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் விழா நடத்தப்பட்டது. இதற்கான திருமண மண்டபம் வாடகைத்தொகை மற்றும் அங்கு பணிபுரிந்த பணியாளர்களுக்கு டீ மற்றும் காலை, மதிய உணவுகள் வழங்கப்பட்டு, செலவு தொகை ரூ.68740/– பரமக்குடி நகராட்சி வருவாய் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்டு இந்நகர்மன்ற தீர்மானத்தில் வைக்கப்பட்டு ECS மூலமாக தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் பார்த்தமைக்கு ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் உள்ள தொகைகள் யாவும் முந்தைய தேதியில் பெறப்பட்ட தொகையாகும். மனுதாரர் செலுத்திய தொகை முன்வைப்பு பதிவேட்டின்படி 2023–2024ம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

பரமக்குடி நகராட்சி மூலம் ஒப்பந்தப் பணிகள் மேற்கொண்டதில் ரூ.10000/– ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் பதிவு இல்லாத காரணத்தினால், மேற்படிதொகையினை வழங்க இயலவில்லை. இப்புகாரானது முற்றிலும் உண்மைக்கு புறம்பாக உள்ளது '' என தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பரமக்குடி நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 17.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் மூலமாக 30.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. 17.09.2024 அன்று அரசு விடுமுறை அளித்ததால், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 30.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 10.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

4. மனுதாரர் திரு.ஐ.வின்செண்ட்ராஜா 30.09.2024 ம் அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.:

5) பரமக்குடி நகராட்சி ஆணையரின் 06.09.2024 நாளிட்ட தனது கடிதத்தில் மேற்கண்ட விசாரணைக்கு தன்னால் நேரில் ஆஜராக முடியவில்லை என்றும் பரமக்குடி நகராட்சி மேலாளர் திரு. எம். தங்கரசு என்பவரை உரிய ஆவணங்களுடன் நேரடி விசாரணைக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

6) 30.09.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பாக பரமக்குடி நகராட்சி மேலாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகை பெற வரும் பணியாளர்களிடம் அலுவலக முறைப்படி உரிய கடிதம் பெறப்பட்டு தொகை பரமக்குடி கருவூலத்தின் மூலம் ஊழியர்களின் வங்கி கணக்கிற்கே தொகை வழங்கப்படுகிறது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டதில் சேமநலநிதித் தொகை கடன் பெறுவதற்கு எந்தவிதமான பணம் கொடுப்பதில்லை என தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். எந்தவித முறைகேடுகளும் இதில் நடைபெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பரமக்குடி நகராட்சி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி கடந்த 18.12.2023 முதல் 05.01.2024 வரையில் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் விழா நடத்தப்பட்டதற்கு, திருமண மண்டப வாடகை தொகை மற்றும் பணிபுரிந்த பணியாளர்களுக்கு டீ மற்றும் காலை, மதிய உணவுகள் மட்டுமே வழங்கப்பட்டது. இதற்குண்டான செலவுத்தொகை ரூ.68740-/ இந்நகராட்சி வருவாய் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்டு பரமக்குடி நகராட்சி நகர் மன்ற தீர்மானத்தில் தொகை வைக்கப்பட்டு ECS மூலமாக வழங்கப்பட்டுள்ளது. எவ்வித முறைகேடுகளும் இதில் நடைபெறவில்லை.

பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் பார்த்தமைக்கு ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் உள்ள தொகைகள் யாவும் முந்தைய தேதியில் பெறப்பட்ட தொகை ஆகும். மனுதாரர் செலுத்திய தொகை முன்வைப்பு பதிவேட்டின்படி 2023-2024ம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது. எவ்வித முறைகேடுகளும் இதில் நடைபெறவில்லை.

பரமக்குடி நகராட்சி மூலம் ஒப்பந்தப் பணிகள் மேற்கொண்டதில் ரூ.10000/- ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் பதிவு இல்லாத காரணத்தினால் மேற்படி தொகையினை வழங்க இயலவில்லை. மேலும் இப்புகாரானது உண்மைக்கு புறம்பானது என தெரிவித்துள்ளார். மேற்படி ரூ.10000/- தொகையினை வரும் 15.10.2024ம் தேதிக்குள் மனுதாரருக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் பரமக்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பரமக்குடி நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

i) பரமக்குடி நகராட்சியில் மேலாளராகப் பணிபுரியும் திரு.தங்கராசு மற்றும் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. சுகன்யா ஆகிய இருவரும் லஞ்சம் கொடுப்பவர்ளுக்கு மட்டுமே வேலை செய்வதாகவும், நகராட்சியில் பணிபுரியும் தொழிலாளர்களின் P.F. பணத்தில் கடன் பெறுவதற்கான விண்ணபத்தை அப்ரூவல் செய்து, அரசு கருவூலத்திற்கு (Treasury) பில்லை அனுப்பி வைப்பதற்கு திருமதி. சுகன்யா என்பவர் நபர் ஒன்றுக்கு ரூ.1000/- வசூலிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட புகார் தொடர்பாக நகராட்சி மேலாளர் தனது வாக்குமூலத்தில் பரமக்குடி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகை பெற முறைப்படி உரிய கடிதம் பெறப்பட்டு பரமக்குடி கருவூலத்தின் மூலம் ஊழியர்களின் தொகை அவர்களின் வங்கி கணக்கிற்கே வழங்கப்படுகிறது. மேலும் சேமநலநிதித் தொகை கடன் பெறுவதற்கு எந்தவிதமான பணம் கொடுப்பதில்லை என

தூய்மைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளதாக தெரிவித்து, தூய்மைப் பணியாளர்களின் தலைவர் அளித்த கடித நகலினை சமர்ப்பித்துள்ளார். இதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என தெரிவித்துள்ளார். P.F. பணம் பெறுவதற்கு கையூட்டு பெறுவதாக கூறப்பட்டுள்ள புகார் தொடர்பாக மனுதாரரால் ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கப்படாத நிலையில், நகராட்சி ஆணையரின் விளக்கத்தினை ஏற்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

ii) மனுதாரர் தனது புகார் மனுவில் 18.12.2023 தேதி முதல் 05.01.2024 வரை 7 நாட்கள் பரமக்குடி நகராட்சிகுட்பட்ட 36 வார்டுகளில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மக்களின் முதல்வர் திட்டத்தின் கீழ் மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் ஏற்பட்ட செலவுகளை மேலாளர் திரு. தங்கராசும், உதவியாளர் மற்றும் திருமதி. சுகன்யாவும் மேற்கொண்ட வகையில் ரூ.2,50,000/– செலவு செய்ததாக பொய் கணக்கு எழுதி அரசுப் பணத்தை கையாடல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படி நிகழ்ச்சிக்கு திருமண மண்டப வாடகை தொகை மற்றும் பணிபுரிந்த பணியாளர்களுக்கு டீ மற்றும் காலை, மதிய உணவுகள் மட்டுமே வழங்கப்பட்டு, செலவு தொகை ரூ.68740–/ ஐ நகராட்சி வருவாய் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்டு பரமக்குடி நகராட்சி நகர் மன்ற தீர்மானத்தில் வைக்கப்பட்டு ECS மூலமாக தொகை வழங்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள நிலையில் உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை (Local Fund Audit) இயக்குநர், இப்புகார் குறித்து சிறப்பு ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

iii) மனுதாரர் தான் ஏற்ற ஒப்பந்த பணி மூன்று வருடத்திற்கு முன் முடிந்து விட்டதால் முன்வைப்புத் தொகை தலா ரூ.10,000/– மற்றும் பில்லில் பிடித்தம் செய்யப்படும் தொகை தலா ரூ.10,000/– ஆகியவற்றை திருப்பி தரக்கோரி 21.12.2023 அன்று மனு அளித்ததன் பேரில் பில்லில் பிடித்தம் செய்யப்பட்ட தலா ரூ.10,000/– மட்டுமே வழங்கப்பட்டு, முன்வைப்புத் தொகை தலா ரூ.10,000/– வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நகராட்சி மேலாளர் திரு. எம். தங்கராஜ் அவர்களின் வாக்குமூலத்தில் மனுதாரர் செலுத்திய தொகை முன்வைப்பு பதிவேட்டின்படி 2023–2024ம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும், பரமக்குடி நகராட்சி மூலம் ஒப்பந்தப் பணிகள் மேற்கொண்டதில் ரூ.10000/– ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் பதிவு இல்லாத காரணத்தினால் மேற்படி தொகையினை வழங்க இயலவில்லை, மேற்படி ரூ.10000/– தொகையினை வரும் 15.10.2024ம் தேதிக்குள் மனுதாரருக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, இம்முறைமன்ற நடுவத்தில் உறுதியளித்தவாறு மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையினை சட்ட விதிகளுக்கு உட்பட்டு வழங்கிட பரமக்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் பதிவு இல்லாத காரணத்தினால் மனுதாரருக்கு சேர வேண்டிய தொகையினை வழங்க இயலவில்லை என்று இம்முறைமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளி பதிவேடு முறையாக பராமரிக்கப்படுவதை அவ்வப்போது கண்காணிக்குமாறு பரமக்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. I.வின்செண்ட் ராஜா,
11/225-B-8, எஸ்.எஸ்.கோவில் தெரு
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்

2) நகராட்சி ஆணையர்,
பரமக்குடி நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
சென்னை.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உ.திரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

3/12/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)